# ஜே.வி.பி. தலைவர்கள் மிருகத்தனமான படுகொலை!

# பாசிச பிரேமதாசா கும்பலின் கிரிமினல் நடவடிக்கை!

இலங்கை - ஜனதா விமுக்தி பெர
ா (ஜே.வி.பி) எனப்படும் மக்கள் விடு
ல முன்னணியின் தலைவர் - நிறுவனர்
ஹண விஜயவீரா, துணைத்தலைவர்
ாத், பொதுச் செயலாளர் உபதிஸ்ஸா
நாயகே உட்பட அதன் அரசியல் தலை
க் குழுவின் ஏழு உறுப்பினர்களில் ஆறு
ரை பாசிச பிரேமதாசா கும்பல் மிகவும்
ூரமான முறையில் கடந்த அக்டோபர்
14 தேதிகளில் படுகொலை செய்துவிட்

ஜே.வி.பி. தலைவர்கள் இராணுவ
தலிலே கொல்லப்படவில்லை. துரோகி
ல் காட்டிக் கொடுக்கப்பட்டு, நிராயுதபா
ளான நிலையில் கைது செய்யப்பட்டு
திரவதைக்குப் பிறகு பாசிச அதிபர் பிரே
சாவின் நேரடி உத்திரவின் பேரில் விசா
ணயின்றி இரகசியமாகப் படுகொலை
ய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி முனையில் நடந்த மோசடி
ன தேர்தல்கள் மூலம் ஆட்சியைப் பிடித்த
ரமதாசா கும்பல் ஜே.விபி.க்கு மக்களி
யே உள்ள ஆதரவு காரணமாக இந்தக்
மினல் குற்றத்தை மூடி மறைப்பதற்கு கட்
கதைகளை அவிழ்த்துவிடுகிறது.

''கைது செய்யப்பட்ட பிறகு ரோஹண
ஜயவீரா தனது தவறுகளை ஒப்புக்கொண்
ர். வன்முறைப் பாதையைக் கைவிடும்
தனது சகாக்களுக்கு வேண்டுகோள்
த்தார். அதன் ஒலிபதிவு நாடா இருக்கி
; ஜே.வி.பியின் தலைமையகத்துக்கு
ாணுவத்தினரை அழைத்துச் சென்றார்;
கிருந்த ஹிராத்திடம் இரகசிய ஆவ
ங்களை ஒப்படைத்துவிட்டு சரணடை
படி கூறினார்; ஹிராத் விஜயவீராவைச்
டார்; இராணுவத்தினர் குறுக்கிட்டு துப்
க்கிச் சூடு நடத்தவே இருவரும் மாண்ட
; அதேபோல பிடிபட்ட காமநாயகே இர
ய இடத்துக்கு இராணுவத்தினரை
ழைத்துப் போய்விட்டு தப்பி ஓட முயன்ற
ாது சுட்டுக் கொல்லப்பட்டார்'' என்று
ரமதாசா கும்பல் புளுகுகிறது.

அதே சமயம் இச்சம்பவங்கள் பற்றி
ழுவிசாரணை நடத்தவும் உத்திரவிட்டுள்
ராம்! கூடவே ஜே.வி.பி. தலைவர்கள்
டம்பர வாழ்க்கை வாழ்ந்த மாளிகைக
ம், தங்கநகைகளும், வெளிநாட்டுப் பாவ
னப் பொருட்களும், ஏராளமான பண
ம், ஆயுதங்களும் கைப்பற்றியதாகக்
றிக் கொள்கிறது. ஜே.வி.பி.யின் இலட்சி
ம், கொள்கை, வழிமுறைகளில் நமக்கு
ன்பாடு கிடையாது. இருந்த போதும்
தற்கு எதிராக பிரேமதாசா கும்பல் பரப்பு
வதெல்லாம் அவதூறுகள்தான் என்பதில் சந்தேகமில்லை என்றே கருதுகிறோம். தவறான கொள்கை - வழிமுறைகளை மேற்கொண்டாலும் அவற்றிலே அவர்களுக்குள்ள உறுதிப்பாட்டை வைத்தே இந்த முடிவுக்கு வருகிறோம்.

1971 ஆம் ஆண்டு ''எழுச்சி - கலகம்'' தோல்வியுற்ற பிறகு அதன் மீது நடந்த விசாரணையின் போது இலங்கை கிரிமினல் நீதிக் கமிஷன் முன்பு நிறுத்தப்பட்ட ரோஹண விஜயவீரா சொன்னார், ''நாங்கள் புரட்சிக்குத் தயாரித்துக் கொண்டிருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் புரட்சியைத் துவங்கி அரசு மீது போர் தொடுக்கவில்லை. அரசுதான் முன்கூட்டியே தாக்குதல் தொடுத்து, ஆயுதந்தாங்கிய எழுச்சியை நடத்தும்படியான நிர்பந்தத்தை எங்கள் மீது திணித்தது. எவ்வாறாயினும், வர்க்கப்போராட்டமும் புரட்சியும் தவிர்க்க முடியாதது. எனவே என்னுடைய எதிர்கால வாழ்க்கையும் விதியும் என்னவானாலும் எனக்குத் துளிகூட வருத்தமில்லை''

ஜே.வி.பி. இயக்கத் தலைவர் - நிறுவனர் ரோஹண விஜயவீரா.



இந்திய, இங்கிலாந்து இராணுவம் போய் அந்த 1971 'எழுச்சி - கலகத்தை' ஒடுக்கியது. 20,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; மகாவலி ஆற்றிலே மனித ரத்தமே செந்நீராகப் பாய்ந்தது. இப்படிக் கடந்த 20 ஆண்டுகளில் பல ஆயிரம் இளைஞர்களைப் பலிகொடுத்து, கடுமையான தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கட்டி வளர்த்த இயக்கத்துக்கு ஜே.வி.பி. தலைவர்கள் துரோகம் செய்தார்கள் என்பது அவதூறு தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

எவ்வளவு கொடிய கிரிமினல் குற்றவாளிகளானாலும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பின் விசாரணைக் கைதிகளுக்குரிய உரிமைகளோடு நடத்தி சட்டப்படியான குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட பிறகுதான் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் இஸ்ரேலிய மொசாத் போன்ற கூலிப்படைகளை வைத்து தொழில் முறை கிரிமினல் குற்றவாளிகளுக்குப் பயிற்சியளித்து இரகசியக் கொலைப்படைக் குழுக்களைக் கட்டியுள்ளது இலங்கை பாசிச ஆளும் கும்பல். அவற்றை வைத்து அரசியல் எதிரிகளைக் கோரமான முறையில் படுகொலை செய்துவருகிறது. இலங்கையின் இந்த இளைய தலைமுறையையே பூண்டோடு ஒழித்துவிடும் அளவு குற்றமற்றவர்களைப் பிடித்து கோரமான முறையில் கொலை செய்து சாலைகளிலே, ஆறு - வாய்க்கால், கடற்கரைகளிலே விசிறியடிக்கின்றது. மின் கம்பங்களிலே கட்டி வைத்து உயிரோடு கொளுத்துகிறது.

1983 ஜூலை 25 அன்று வெள்ளிக்கடை சிறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜகன உட்பட 55 ஈழப் போராளிகள் மீது கொலை வெறியர்களை ஏவி, கண்களைத் தோண்டி உடலைக் கூறுபோட்டுக் குரூரமான முறையில் கொன்றதில் இருந்து இத்தகைய அரசியல் படுகொலைகள் செய்வது இலங்கை ஆளும் பாசிச கும்பலின் வழமையான வழிமுறையாக உள்ளது. இப்போது அதன் ஆட்சிக்கே அச்சுறுத்தலாக வளர்ந்துவிட்ட ஜே.வி.பி. தலைமையை மிருகத்தனமாகக் கொன்று தீர்த்துவிட்டது. மனித உரிமைகள் பற்றிப் பெருங்கூச்சல் போடும் உலக வல்லரசுகளின் ஆசியோடு இத்தகைய அரசியல் படுகொலைகள் தொடர்கின்றன.

ஒரே சமயத்தில் தலைமை முழுவதையும் இழந்தது, ஜே.வி.பி. இயக்கத்துக்கு ஒரு பெரும்சரிவு, பின்னடைவுதான். தேக்கமும், பிளவுகளும் கூட ஏற்படலாம். மிகப் பெரும் அளவு மக்கள் ஆதரவு இருந்தும் கூட தனிநபர் பயங்கரவாதத்தை மேற்கொண்டு சமூக பாசிச இயக்கமாக சீரழிந்து போனது அதன் இன்றைய பின்னடைவுக்கான முக்கியமான காரணமாகும். ஜே.வி.பி. இயக்கத்தின் அனுபவங்கள் எதிர்மறையானவை என்றாலும் புரட்சிகர அமைப்புகள் அவசியம் படிப்பினை பெற வேண்டியதாக உள்ளன.

◆ சோமநாதன்

(ஜே.வி.பி. இயக்கம் தரும் படிப்பினைகள் பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில்...)